**செய்தி வெளியீடு எண்.505** **நாள். 20.08.2009**

இன்புளுயன்சா A H1N1 நோயாளிகள் மூன்று வகைகளாக பிரிக்கப்பட்டு அவர்களுக்குத் தேவையான பரிசோதனைகள், அளிக்கப்பட வேண்டிய சிகிச்சைகள் மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து கீழ்கண்ட ஆலோசனைகளை மைய அரசு வழங்கியுள்ளது.

**வகை 1:**

- சாதாரண காய்ச்சலுடன் இருமல் மற்றும் தொண்டைவலி காணப்படும் நோயாளிகளுக்கு, உடம்பு வலி, தலைவலி, வயிற்றுப்போக்கு மற்றும் வாந்தி இருக்கலாம் அல்லது இல்லாமலும் இருக்கலாம்.

- இந்த நோயாளிகளுக்கு டாமிபுளு (Oseltamavir) மருந்து தேவையில்லை. இரண்டு நாட்களுக்கு தொடர் கண்காணிப்பில் இருப்பது அவசியம்.

- ஆய்வக பரிசோதனை தேவையில்லை.

- இந்நோயாளிகள் வீட்டிலேயே ஓய்வெடுத்துக் கொள்ளுமாறும், மற்ற நபர்களுடன் தொடர்பினை குறைத்துக் கொள்ளவும் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

- இருமல், தும்மல் இருந்தால் கைக்குட்டைகளை பயன்படுத்திட வேண்டும். பயணங்களை தவிர்ப்பது நல்லது.

**வகை 2:**

- வகை ஒன்றில் காணப்படும் நோய் அறிகுறிகளுடன், கடுமையான காய்ச்சல் மற்றும் கடுமையான தொண்டைவலி இருந்தால் அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டு அவர்களுக்கு டாமிபுளு (Oseltamavir) மருந்து கொடுக்கப்பட வேண்டும்.

- வகை ஒன்றில் காணப்படும் நோய் அறிகுறிகளுடன் உள்ள நபர்கள் ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தையாகவோ, கர்ப்பிணியாகவோ, 65 வயதிற்கு மேல் உள்ள முதியவராகவோ அல்லது நுரையீரல், இருதயம், கல்லீரல், சிறுநீரகம், நீரழிவு, நரம்பு, ரத்தம் மற்றும் எச்ஐவி/எய்ட்ஸ் நோய்களால் பாதிக்கப்பட்டிருந்தாலோ அவர்களுக்கு டாமிபுளு (Oseltamavir) மருந்து கொடுக்கப்பட வேண்டும்.

- அவர்களுக்கு ஆய்வகப் பரிசோதனை தேவையில்லை.

- வீட்டில் தனிமைப்படுத்தப்பட்டு ஓய்வு எடுத்துக் கொள்ள வேண்டும்.

**வகை 3:**

மேற்கூறிய வகை 1 மற்றும் வகை 2—க்கான அறிகுறிகளுடன், மூச்சுத்திணறல், நெஞ்சுவலி, மயக்கம், குறைந்த இரத்த அழுத்தம், இரத்தத்துடன் கலந்த சளி, நீல நிறமாகும் நகங்கள், குழந்தைகளை பொருத்தவரை உணவு அருந்ததாத நிலை ஆகிய சூழ்நிலைகளில்

- அவர்களை A H1N1 ஆய்வக பரிசோதனைக்கு உட்படுத்திட வேண்டும்.

- மருத்துவமனையில் உள் நோயாளியாக அனுமதிக்கப்பட வேண்டும்.
- டாமிபுளு (Oseltamavir) மருந்து கொடுக்கப்பட வேண்டும்.

எனவே சாதாரண ஜலதோஷம் உள்ளவர்கள் அனைவரும் A H1N1 நோய்க்கு ஆய்வக பரிசோதனை செய்திடவேண்டிய அவசியம் இல்லை. மருத்துவர் ஆலோசனையின் பேரில் பரிசோதனை செய்து கொள்வது அவசியம். தேவையற்ற நிலையில் டாமிபுளு (Oseltamavir) மாத்திரைகளை பயன்படுத்தாமல் இருத்தல் நல்லது.

மத்திய அரசு சுகாதாரத் துறை வகுத்துள்ள வழிமுறைகளைப் பின்பற்றி, ஸ்வைன் ப்ளு நோயின் மாதிரிகளை பரிசோதனை செய்யத் தேவையான வசதிகள் உள்ள தனியார் ஆய்வுக் கூடங்களை தமிழக அரசு அங்கீகரித்து வருகிறது. ஏற்கனவே, பாரத் ஸ்கேன்ஸ் பிரைவேட் லிமிடெட், இராயப்பேட்டை, சென்னை; ஹைடெக் டையக்னாஸ்டிக் சென்டர், தி.நகர், சென்னை; டையக்னாஸ்டிக் சர்வீசஸ், பர்கிட் ரோடு, தி.நகர், சென்னை; மைக்ரோ லேப், கௌலி பிரவுன் ரோடு, ஆர்.எஸ்.புரம், கோயம்புத்தூர்; டாக்டர் ராத்'ஸ் லேப் (டாக்டர்ஸ் டையக்னாஸ்டிக் சென்டர்), தில்லை நகர், திருச்சி ஆகிய ஐந்து தனியார் ஆய்வுக் கூடங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. தற்போது கீழ்கண்ட மேலும் நான்கு தனியார் ஆய்வுக் கூடங்களை ஸ்வைன் ப்ளு மாதிரிகளை பரிசோதனை செய்ய அரசு அங்கீகரித்துள்ளது.

1. லிஸ்டர் மெட்ரோபாலிஸ் லேபரட்டரி மற்றும் ரிசர்ச் சென்டர் பிரைவேட் லிமிடெட், எண்.3, ஜெகன்னாதன் ரோடு, நுங்கம்பாக்கம், சென்னை – 600 034.
2. ஸ்ரீ இராமச்சந்திரா மெடிக்கல் சென்டர், போரூர், சென்னை– 600 116.
3. இம்முநோ ஆன்சிலரி கிளினிக்கல் சர்வீஸ், எண்.59, டி.வி. சுவாமி ரோடு (மேற்கு), ஆர்.எஸ்.புரம், கோயம்புத்தூர்.
4. விவேக் லேபாரட்டரிஸ், எண்.253, கே–11, கே.பி. ரோடு, நாகர்கோயில்.

இதுவரை ஒன்பது தனியார் ஆய்வுக் கூடங்கள் அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. மேலே குறிப்பிட்ட வகைகளில் ஸ்வைன் ப்ளு காய்ச்சல் அறிகுறிகள் உள்ளவர்கள், அவர்கள் விரும்பினால், அரசால் அங்கீகரிக்கப்பட்ட மேற்கண்ட ஒன்பது தனியார் ஆய்வுக் கூடங்களிலும் பரிசோதனை செய்து கொள்ளலாம்.

வி.கே.சுப்புராஜ்

முதன்மைச் செயலாளர்.

*****

வெளியீடு: இயக்குநர் செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.